Irumudi Thaangiye Selluvom

Ayyappa · Tamil

இருமுடி தாங்கியே செல்லுவோம்
இறைவன் ஐயப்பனை காணவே
இருமுடி தாங்கியே செல்லுவோம்...

எருமேலி என்னும் வனத்திடையே
ஏழைகளை காப்பவன் இருக்கிறான்
எல்லா இடத்திலும் இருப்பவன்
அவன் எங்கெங்கும் லீலைகள் புரிகிறான்

இருமுடி தாங்கியே செல்லுவோம்...

கூட்டம் கூட்டமாக பக்தர்கள்
கூடி கூத்தாடி செல்கிறார்
கூவும் ஒலி எல்லாம் சரணம்
கூட்டத்திலே ஐயப்பன் இருக்கிறான்

இருமுடி தாங்கியே செல்லுவோம்...

பார்ப்பவர் மறுபடியும் பார்க்கிறார்
பாராதவர் வியந்து நோக்குறார்
பாராளும் தெய்வம் சபரீசன்
(அவனை) காணவே சபரி மலை செல்லுவோம்

இருமுடி தாங்கியே செல்லுவோம்...